தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்

CODE - DTA 13

UNIT - III

5. தொகை மரபு

6. உருபியல்

# ௫. தொகைமரபு

மொழிக்கு ஈறாகும் எழுத்துக்கள் 24. அவற்றால் அமையும் சொற்கள் நிலைமொழியாய் நின்று வருமொழியோடு அல்வழி, வேற்றுமைப் பொருண்மைகளில் புணரும். அப்புணர்ச்சிகளைத் தனித்தனி விதிகளாகக் கூறினால் அவை பல்கிப் பெருகும். அவ்வாறின்றி ஒரு முடிபு கொள்ளும் பல ஈற்றுச் சொற்களைத் தொல்காப்பியர் ஒரே இடத்தில் தொகுத்துக் கூறுகிறார். அதனால் இவ்வியல் **தொகைமரபு** எனப் பெயர் பெற்றது. இவ்வியலில் அமைந்த நூற்பாக்கள் **30**.

தொகை மரபு கூறும் செய்திகளை 1.உயிரீறு, மெய்யீறுகளின் பொதுப்புணர்ச்சி 2.வேற்றுமைப் புணர்ச்சி 3.சாரியை பெறும் அளவு, நிறை, எண்ணுப்பெயர்கள் 4.மரூஉச் சொற்களின் முடிபு 5.புறனடை என ஐந்தாகப் பாகுபடுத்தலாம்.

## பொதுப் புணர்ச்சியில் மெல்லினம் தோன்றுதல்

**144. க¹ச²த³ப⁴ முதலிய மொழிமேல் தோன்றும்**
**மெல்லெழுத்து இயற்கை சொல்லிய முறையான்**
**ங¹ஞ²ந³ம⁴ என்னும் ஒற்றுஆ கும்மே**
**அன்ன மரபின் மொழிவயி னான.**

**[இ-ள்]** உயிரையோ மெய்யையோ இறுதியாகக் கொண்ட சொற்கள் நிலைமொழியாக நிற்கும். அவற்றுக்கு முன்னால் 1.க 2.ச 3.த 4.ப என்னும் வல்லெழுத்துக்களை முதலாக உடைய சொற்கள் வந்து அல்வழியிலும் வேற்றுமையிலும் புணரும். அவ்விடத்துக் க,ச,த,ப என்பவற்றிற்கு இனமாகிய 1.ங 2.ஞ 3.ந 4.ம என்னும் மெல்லெழுத்துக்கள் தோன்றும். **[எ-டு]**

வேற்றுமை

விள + கோடு → விளங்கோடு; மா + சோலை→ மாஞ்சோலை
பூ + தோட்டம் → பூந்தோட்டம் ; விள + பழம் → விளம்பழம்

அல்வழி

மரம் → மர + குறிது → மரங்குறிது; மர + சிறிது → மரஞ்சிறிது
மரம் → மர + தீது → மரந்தீது; மர + பெரிது → மரம்பெரிது

(மரம் என்பது மர என விதி ஈறாய் நின்றது) *(1)*

## பொதுப் புணர்ச்சியில் வருமொழி இயல்பாதல்

**145. ஞ[1]ந[2]ம[3]ய[4] வ[5] எனும் முதலாகு மொழியும்**
**உயிர்முதல்[6] ஆகிய மொழியும் உளப்பட**
**அன்றி அனைத்தும் எல்லா வழியும்**
**நின்ற சொல்முன் இயல்புஆ கும்மே.**

**[இ-ள்]** மொழிக்கு இறுதியில் வரும் 24 ஈறுகளைக் கொண்ட சொற்கள் நிலைமொழியாக நிற்கும். அச்சொற்களின் முன் 1.ஞ 2.ந 3.ம 4.ய 5.வ என்னும் மெய்யெழுத்துக்களை முதலாக உடைய சொற்களும் 6.பன்னிரண்டு உயிரெழுத்துக்களை முதலாக உடைய சொற்களும் வரும். அவை அல்வழி, வேற்றுமை என்னும் இருவகைப் பொருண்மையிலும் புணரும். அப்புணர்ச்சியில் சொற்கள் எவ்வித மாற்றமும் இன்றி இயல்பாகும். **[எ-டு]**

அல்வழி

விள + ஞான்றது → விள ஞான்றது → (உயிரீறு + ஞகர முதல்)
தாழ் + ஞான்றது → தாழ் ஞான்றது → (மெய்யீறு+ஞகர முதல்)
நீண்டது, மாண்டது, யாது, வலிது.
விள+அடைந்தது → விள அடைந்தது; தாழ்+அடைந்தது → தாழ் அடைந்தது, ஆடிற்று, உடைந்தது, ஓடிற்று (உயிர்முதல்)

வேற்றுமை

விள+ஞாற்சி → விளஞாற்சி → (உயிரீறு +ஞகர முதல்)
தாழ்+ஞாற்சி → தாழ்ஞாற்சி → (மெய்யீறு+ஞகர முதல்)
நீட்சி, மாட்சி, யாப்பு, வலிமை
விள+அடைவு → விளஅடைவு; தாழ்+அடைவு → தாழ்அடைவு, ஆட்டம் ... ஒடுக்கம். (உயிர்முதல்)

(2)

## பொதுப் புணர்ச்சியில் மெல்லெழுத்து உறழ்தல்

**146. அவற்றுள்,**
**மெல்லெழுத்து இயற்கை உறழினும் வரையார்**
**சொல்லிய தொடர்மொழி இறுதி யான.**

**[இ-ள்]** மேற்கூறப்பட்ட மெய்யெழுத்துக்கள் ஐந்து. அவற்றுள் ஞ், ந், ம் என்னும் மூன்றும் மெல்லெழுத்துக்களாகும். இம்மூன்றையும் முதலாக உடைய மொழிகள் வருமொழியாக வந்து தொடர் மொழியோடு புணரும்போது இயல்பாகவும் முடியும் ; மிக்கும் முடியும். **[எ-டு]**

கதிர் + ஞெரி → கதிர்ஞெரி → இயல்பு
கதிர் +ஞெரி → கதிர்ஞ்ஞெரி → மிகுதி

கதிர்நுனி, கதிர்ந்நுனி
கதிர்முரி, கதிர்ம்முரி } (இவை மெல்லெழுத்து மிகாமலும் மிக்கும் முடிந்ததால் உறழ்ச்சி)

1. ஓரெழுத்து ஒருமொழியிலும் 2. ஈரெழுத்து ஒருமொழியிலும் ஞ,ந,ம வரின் அவையும் உறழ்ச்சி முடிபைப் பெறும். [எ-டு]

1. பூ+ஞெரி → பூஞெரி; பூஞ்ஞெரி

2. செய்+நன்றி → செய்நன்றி; செய்ந்நன்றி (3)

## 'யா'வும் 'ஞா'வும் ஒத்த பொருளில் வருதல்

**147. ணன என் புள்ளிமுன் யாவும் ஞாவும்**
**வினையோர் அனைய என்மனார் புலவர்.**

[இ-ள்] *1.*ணகர (ண்) 2.னகர (ன்) ஈற்றுச் சொற்கள் நிலைமொழியாக நிற்கும். அச்சொற்களின் முன் 'யா' என்னும் முதலெழுத்தை உடைய வினைச்சொல் வந்து புணரும். அச்சொல்லில் யா நிற்கும் இடத்தில் 'ஞா' என்னும் எழுத்து நிற்பினும் அவ்வினைத் தன்மை மாறாது என்று சொல்லுவர் புலவர். [எ-டு]

மண் + யாத்த → மண்ஞாத்த
பொன்+யாத்த → பொன்ஞாத்த

இந்நூற்பாவில் யா என்னும் எழுத்து முற்கூறப்பட்டதால் யா நின்ற இடத்தில் ஞா நிற்கும். ஆனால் ஞா நின்ற இடத்தில் யா நிற்காது.

மண்+ஞான்றது → மண்யான்றது என வராது.

(ஞாத்தல், யாத்தல் என்பன கட்டுதல் என்னும் ஒரு பொருளையே குறிப்பனவாகும்). (4)

## நிலைமொழி (ண்,ன்) ஈறுகள் அல்வழியில் இயல்பாதல்

**148. மொழிமுதல் ஆகும் எல்லா எழுத்தும்**
**வருவழி நின்ற ஆயிரு புள்ளியும்**
**வேற்றுமை அல்வழித் திரிபிடன் இலவே.**

[இ-ள்] மேற்கூறப்பட்ட ண், ன் என்னும் மெய்யெழுத்துக்களை ஈறாக உடைய சொற்கள் நிலைமொழியாக நிற்கும். அவற்றின்முன் மொழிக்கு முதலாக வரும் எழுத்துக்கள் வந்து வேற்றுமை அல்லாத அல்வழிப் பொருண்மையில் புணரும். அவ்விடத்துச் சொற்கள் எவ்வித மாற்றமும் இன்றி இயல்பாக நிற்கும். [எ-டு]

மண் +கடிது → மண்கடிது; மண் சிறிது; மண் தீது; மண்பெரிது
பொன்+கடிது → பொன்கடிது; பொன் சிறிது; பொன் தீது; பொன் பெரிது.

இவை அனைத்தும் எழுவாய்த் (அல்வழித்) தொடர்கள். அல்வழியில் திரிவதில்லை. எனவே வேற்றுமையில் திரியும் என்பது பெறப்படும்.

மண்+குடம் → மட்குடம் (மண்ணால் ஆகிய குடம்)
பொன்+சிலை → பொற்சிலை (பொன்னால் ஆகிய சிலை) (5)

### வேற்றுமையில் (ண், ன்) இயல்பாகும் இடங்கள்

**149. வேற்றுமைக் கண்ணும் வல்லெழுத்து அல்வழி
மேற்கூறு இயற்கை ஆவயி னான.**

**[இ-ள்]** ணகர, னகார ஈற்றுச் சொற்கள் நிலைமொழியாக நின்று வல்லினம் அல்லாத பிற மெய்யெழுத்துக்களுடன் வேற்றுமைப் பொருண்மையில் புணரும். அப்புணர்ச்சியில் முன் அல்வழிக்குக் கூறப்பட்ட விதியைப் பொருந்தி இயல்பாகப் புணரும். **[எ-டு]**

மண்+வலிமை → மண்வலிமை (மண்ணினது வலிமை)
பொன்+நீட்சி → பொன்நீட்சி (பொன்னினது நீட்சி) } 6 ஆம் வே.தொகை

(6)

### வருமொழியில் த் (ற்), ந் (ன்) திரிதல்

**150. லனஎன வரூஉம் புள்ளி முன்னர்த்
த ந எனவரின் றனஆ கும்மே.**

**[இ-ள்]** ல், ன் என்னும் மெய்யெழுத்துக்களை ஈறாக உடைய சொற்கள் நிலைமொழியாய் நிற்கும். அவற்றின் முன் தகர, நகர மெய்களை முதலெழுத்தாய் உடைய வருமொழி வந்து புணரும். அவ்வாறு புணரும் போது தகரம் (த்) றகரமாகவும் (ற்) நகரம் (ந்) னகரமாகவும் (ன்) திரியும். **[எ-டு]**

கல்+தீது → கல்றீது
பொன்+தீது → பொன்றீது } தகரம் றகரமாதல்

கல்+நன்று → கன்னன்று
பொன்+நன்று → பொன்னன்று } நகரம் னகரமாதல்

(7)

### வருமொழியில் த் (ட்), ந் (ண்) திரிதல்

**151. ணளஎன் புள்ளிமுன் டணஎனத் தோன்றும்.**

**[இ-ள்]** ண், ள் என்னும் மெய்யெழுத்துக்கள் நிலைமொழி ஈறாய் நிற்கும். அவற்றின் முன் தகர, நகரச் சொற்கள் வந்து புணரும். அவ்வெழுத்துக்களுள் தகரம் (த்) டகரமாகவும் (ட்) நகரம் (ந்) ணகரமாகவும் (ண்) திரியும். **[எ-டு]**

மண்+தீது → மண்டீது
முள்+தீது → முள்டீது } தகரம் டகரமாதல்

மண்+நன்று → மண்ணன்று
முள்+நன்று → முண்ணன்று } நகரம் ணகரமாதல்

(8)

### முன்னிலை வினைச்சொற்கள் வல்லெழுத்துடன் புணர்தல்

**152. உயிர்ஈறு ஆகிய முன்னிலைக் கிளவியும்**
**புள்ளி இறுதி முன்னிலைக் கிளவியும்**
**இயல்புஆ குநவும்[1] உறழ்ஆ குநவும்[2] என்று**
**ஆஈர் இயல வல்லெழுத்து வரினே.**

[இ-ள்] உயிரையும் மெய்யையும் இறுதியாக உடைய முன்னிலைச் சொற்கள் நிலைமொழியாய் நிற்கும். அவற்றோடு வல்லெழுத்தினை முதலாக உடைய சொற்கள் வந்து புணரும். அவ்விடத்து அவை 1.இயல்பாதல் 2.உறழ்தல் என்னும் இருவகை முடிவுகளையும் பெறும்.

[எ-டு]

1. எறி+கொற்றா → எறிகொற்றா → உயிர் ஈறு } இயல்பு
   உண்+கொற்றா → உண்கொற்றா → மெய் ஈறு }

2. நட+கொற்றா → நடகொற்றா } இயல்பு } உறழ்ச்சி
   ஈர்+கொற்றா → ஈர்கொற்றா }

   நட+கொற்றா → நடக்கொற்றா } மிகுதல் }
   ஈர் + கொற்றா → ஈர்க்கொற்றா }

(9)

### முன்னிலை வினைச்சொற்களுக்குச் சிறப்பு விதி

**153. ஔஎன வரூஉம் உயிர்இறு சொல்லும்[1]**
**ஞ ந ம வ என்னும் புள்ளி இறுதியும்[2]**
**குற்றிய லுகரத்து இறுதியும்[3] உளப்பட**
**முற்றத் தோன்றா முன்னிலை மொழிக்கே.**

[இ-ள்] 1.ஔகாரத்தை இறுதியாக உடைய முன்னிலைச் சொல் 2.ஞ, ந, ம, வ என்னும் எழுத்துக்களை இறுதியாக உடைய முன்னிலைச் சொல் 3.குற்றியலுகரத்தை இறுதியாக உடைய முன்னிலைச் சொல் ஆகியவை நிலைமொழியாக நிற்கும். அவ்விடத்துக் கசதபக்களை முதலாக உடைய வருமொழி வந்து புணரும். அந்நிலையில் சொற்கள் மேற்கூறப்பட்டவற்றைப் போல இயல்பு, உறழ்ச்சி என்னும் இரு முடிபுகளையும் பெறுவதில்லை.

(முற்றத் தோன்றா என்று கூறியதால் அவை உகர ஈற்றைப் பெற்றும் வல்லெழுத்து உறழ்ந்தும் முடியும்) [எ-டு]

1. கௌ+கொற்றா → கௌ+உ+கொற்றா → கௌவுகொற்றா } உகரம்
2. உரிஞ்+கொற்றா → உரிஞ்+உ+கொற்றா → உரிஞுகொற்றா } பெற்றன

1. கௌ+கொற்றா → கௌவுக்கொற்றா } உகரமும் வல்லெழுத்தும்
2. உரிஞ்+கொற்றா → உரிஞுக்கொற்றா } பெற்றன.
3. கூடு+கொற்றா→கூடுகொற்றா; கூடுக்கொற்றா → உறழ்ச்சி. **(10)**

## உயர்திணைப் பெயர்கள் நாற்கணத்தோடும் புணர்தல்

**154. உயிர்ஈ றாகிய உயர்திணைப் பெயரும்[1]**
**புள்ளி இறுதி உயர்திணைப் பெயரும்[2]**
**எல்லா வழியும் இயல்புஎன மொழிப.**

**[இ-ள்]** 1.உயிரெழுத்துக்களை ஈறாக உடைய உயர்திணைப் பெயர்கள் 2.மெய்யெழுத்துக்களை ஈறாக உடைய உயர்திணைப் பெயர்கள் ஆகிய அனைத்தும் நிலைமொழியாய் நிற்கும். அவற்றின் முன் வன்கணம் முதலிய நான்கு கணமும் வந்து அல்வழி, வேற்றுமை என்னும் இருவகைப் பொருண்மையிலும் புணரும். அவ்விடத்துச் சொற்கள் எவ்வித மாறுபாடும் இன்றி இயல்பாகும் என்று சொல்லுவர் புலவர்.

அல்வழி

நம்பி+குறியன் → நம்பி குறியன் (வன்கணம்)
நம்பி+மாண்டான் → நம்பி மாண்டான் (மென்கணம்)
அவன்+வலியன் → அவன் வலியன் (இடைக்கணம்)
சாத்தன்+அவன் → சாத்தன் அவன் (உயிர்க்கணம்)

வேற்றுமை

நம்பி+கை → நம்பி கை (வல்லினம்)
நங்கை+மாட்சி → நங்கை மாட்சி (மெல்லினம்)
அவன்+வலிமை → அவன் வலிமை (இடையினம்)
சாத்தன்+அடைவு (முறை) → சாத்தன் அடைவு (உயிர்க்கணம்) **(11)**

## இகர ஈற்று உயர்திணைப் பெயர் திரிதல்

**155. அவற்றுள்**
**இகர இறுபெயர் திரிபிடன் உடைத்தே.**

**[இ-ள்]** மேற்கூறிய உயர்திணைப் பெயர்களுள் இகரத்தை ஈறாக உடைய (பட்டப்) பெயர்கள் இயல்பாகாமல் வல்லெழுத்து மிக்கு முடியும். **[எ-டு]**

எட்டி+பூ → எட்டிப்பூ (எட்டி - வணிகருள் சிறந்தவன்)
காவிதி+பூ → காவிதிப்பூ (காவிதி - வேளாளருள் சிறந்தவன்)
நம்பி+பூ → நம்பிப்பூ (நம்பி - ஆடவருள் சிறந்தவன்) **(12)**

## விரவுப்பெயர் இயல்பாதல்

**156. அஃறிணை விரவுப்பெயர் இயல்புமார் உளவே.**

**[இ-ள்]** உயர்திணையோடு அஃறிணையிலும் கலந்து வருவன விரவுப் பெயர்களாகும். அவ்விரவுப் பெயர்களின் முன்னர் நாற்கணமும் வர இயல்பாய் முடியும். **[எ-டு]**

அல்வழி

சாத்தன்+குறியன் → சாத்தன் குறியன் → உயர்திணை } விரவுப்பெயர்
சாத்தன்+குறிது → சாத்தன் குறிது → அஃறிணை }

வேற்றுமை

சாத்தன்+கை → சாத்தன் கை → விரவுப்பெயர் *(13)*

**மூன்றாம் வேற்றுமைப் புணர்ச்சியில் திரிதல்**

**157. புள்ளி இறுதியும் உயிர்இறு கிளவியும்**
**வல்லெழுத்து மிகுதி சொல்லிய முறையால்**
**தம்மின் ஆகிய தொழிற்சொல் முன்வரின்**
**மெய்ம்மை ஆகலும்[1] உறழத் தோன்றலும்[2]**
**அம்முறை இரண்டும் உரியவை உளவே**
**வேற்றுமை மருங்கில் போற்றல் வேண்டும்**

**[இ-ள்]** மெய்யையோ உயிரையோ இறுதியாக உடைய சொற்கள் நிலைமொழியாக நிற்கும். அவற்றின் முன் வல்லெழுத்தை முதலாக உடைய சொற்கள் வந்து வேற்றுமைப் பொருண்மையில் புணரும். அப்புணர்ச்சியில் இனிக் கூறப்போகும் பொது விதிப்படி (நூ.*358, 236, 363*) வல்லெழுத்து மிக்கு முடியும். ஆயினும் அவ்விரு (மெய், உயிர்) ஈறுகளை உடைய சொற்களின் முன் மூன்றாம் வேற்றுமைக்குரிய வினைமுதற் பொருளால் வருகின்ற வினைச்சொற்கள் வந்து புணரும். அவ்விடத்து *1.* இயல்பாகவும் முடியும் *2.*உறழ்ந்தும் முடியும். இவ்வாறு அமையும் வேற்றுமைப் புணர்ச்சியின் மாற்றங்களை இடத்திற்கு ஏற்ப அறிந்து போற்றுதல் வேண்டும். **[எ-டு]**

நாய்+கோட்பட்டான் → நாய்கோட்பட்டான் → (நாயால் கொள்ளப்பட்டான்) மெய்முன் இயல்பு

புலி +கோட்பட்டான் → புலிகோட்பட்டான் → (புலியாச், கொள்ளப்பட்டான்) உயிர்முன் இயல்பு

சூர்+கோட்பட்டான் → சூர்கோட்பட்டான் } மெய்முன்
சூர்க்கோட்பட்டான் } உறழ்ச்சி

வளி+கோட்பட்டான் → வளிகோட்பட்டான் } உயிர் முன்
வளிக்கோட்பட்டான் } உறழ்ச்சி

**விளக்கம்**

நாய், புலி, சூர் (கொடுந்தெய்வம்), வளி (காற்று) என்பன கருத்தா (வினைமுதல்). கோள் - கொள்ளுதல் → தன் தொழில் (கருத்தாவின் தொழில்). கோட்படுதல் - (கொள்ளப்படுதல்) தம்மினாகிய தொழிற்சொல்.

வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லெழுத்து மிகும் என்பது உயிர்மயங்கியல் (நூ.236), புள்ளி மயங்கியல் (நூ.358, 363) ஆகியவற்றில் பொது விதியாகக் கூறப்படுகிறது. அப்பொதுவிதி ஈண்டுப் பொருந்தாமல் இயல்பாகவும் உறழ்ந்தும் வருவதை இந்நூற்பா சுட்டுகிறது. (14)

## இரண்டாம் வேற்றுமைத் திரிபுகள் (10 + 1 = 11)

**158.** **மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும்[1]**
**வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றலும்[2]**
**இயற்கை மருங்கின் மிகற்கை தோன்றலும்[3]**
**உயிர்மிக வருவழி உயிர்கெட வருதலும்[4]**
**சாரியை உள்வழிச் சாரியை கெடுதலும்[5]**
**சாரியை உள்வழித் தன்உருபு நிலையலும்[6]**
**சாரியை இயற்கை உறழத் தோன்றலும்[7]**
**உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்[8]**
**அஃறிணை விரவுப்பெயர்க்கு அவ்வியல் நிலையலும்[9]**
**மெய்பிறிது ஆகிடத்து இயற்கை ஆதலும்[10]**
**அன்ன பிறவும்[11] தன்னியல் மருங்கின்**
**மெய்பெறக் கிளந்து பொருள்வரைந்து இசைக்கும்**
**ஐகார வேற்றுமைத் திரிபுஎன மொழிப.**

**(இ-ள்)** *1.* மெல்லெழுத்து மிக வேண்டிய இடத்தில் வல்லெழுத்து மிகுதல் *2.* வல்லெழுத்து மிகுந்து வரவேண்டிய இடத்தில் மெல்லெழுத்து மிக்கு வருதல் *3.* இயல்பாகப் புணர வேண்டிய இடத்தில் வல்லெழுத்துத் தோன்றுதல் *4.* உயிரெழுத்து மிகுந்து வரவேண்டிய நிலையில் மிகாமல் வருதல் *5.* சாரியை பெற வேண்டிய இடத்தில் அச்சாரியை பெறாமல் வருதல் *6.*சாரியை நிலைபெற்ற இடத்தில் இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்பட்டுத் தோன்றுதல்.

*7.* சாரியை வர வேண்டிய இடத்துச் சாரியை வராததோடு இயல்பு, மிகுதல், உறழ்ச்சி என்னும் மூவகை நிலையினைப் பெறுதல் *8.*உயர்திணையில் இரண்டாம் வேற்றுமை உருபு மறையாமல் வெளிப்பட்டு நிற்றல் *9.*அஃறிணை விரவுப் பெயரிலும் இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படுதல் *10.* மெய்யெழுத்துத் திரிய வேண்டிய இடத்தில் இயல்பாக நிற்றல் எனப் பத்தாகும். இவையும் *11.*இவை போன்ற பிறவும் வேற்றுமைக்குரிய பொதுப் புணர்ச்சியிலிருந்து மாறுபட்டு அமைவனவாகும். இவற்றை வேறு முடிபினை உடைய ஐகார வேற்றுமையின் திரிபுகள் என்று சொல்லுவர் புலவர். **(எ-டு)**

1. மெல்லெழுத்து மிக வேண்டிய இடத்தில் வல்லெழுத்து மிகுதல்.
விளக்குறைத்தான் → விள + குறைத்தான் → விளங்குறைத்தான் (விளவினைக் குறைத்தான்).

மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே (நூ. 218) என்னும் விதிப்படி மெல்லெழுத்து மிக வேண்டும். ஆனால் வல்லெழுத்து மிக்கது.

2. வல்லெழுத்து மிக வேண்டிய இடத்தில் மெல்லெழுத்து மிகுதல்.
மரங்குறைத்தான் → மரம் + குறைத்தான் → மரக்குறைத்தான் (மரத்தினைக் குறைத்தான்)

— மகர .... வல்லெழுத்து மிகுமே (நூ. 311) என்னும் விதிப்படி வல்லெழுத்து மிக வேண்டிய இடத்தில் மெல்லெழுத்து மிக்கது.

3. இயல்பாக முடிய வேண்டிய இடத்தில் மிக்கு முடிதல்.
தாய்க்கொலை → தாய் + கொலை → தாய்கொலை

தாய்என் கிளவி இயற்கை ஆகும் (நூ.359) என்னும் விதிப்படி இயல்பாக வர வேண்டிய இடத்தில் வல்லெழுத்து மிக்கு முடிந்தது.

4. உயிரெழுத்து மிக வேண்டிய இடத்தில் அவ்வுயிரெழுத்துக் கெட்டு வருதல்.
பலாக்குறைத்தான் → பலா + குறைத்தான் → பலாஅக்குறைத்தான் (பலாவினைக் குறைத்தான்)

குறியதன் ....அகரக் கிளவி (நூ. 227) என்னும் விதிப்படி மிக வேண்டிய அகரம் மிகாமல் புணர்ந்தது.

5. சாரியை பெற வேண்டிய இடத்து அச்சாரியை பெறாமல் வருதல்.
வண்டுகொணர்ந்தான் → வண்டு + இன் + கொணர்ந்தான் → வண்டின் கொணர்ந்தான் (வண்டினைக் கொணர்ந்தான்)

வண்டும் பெண்டும் இன்னொடு சிவணும் (நூ. 421) என்னும் விதிப்படி இன் சாரியை பெற வேண்டிய இடத்து அச்சாரியை பெறவில்லை.

6. சாரியை நிலைபெற்ற இடத்தில் அச்சாரியையோடு தன் உருபாகிய ஐகாரத்தைப் பெறுதல்.
வண்டினைக் கொணர்ந்தான் → வண்டு + இன் + ஐ + கொணர்ந்தான்

வண்டும் பெண்டும் இன்னொடு சிவணும் (நூ. 421) என்னும் விதிப்படி இன் சாரியை பெற்றதோடு இரண்டாம் வேற்றுமை உருபும் (ஐ) வந்தது.

7. சாரியை வரவேண்டிய இடத்தில் அச்சாரியை பெறாமல் (அ) இயல்பாக நிற்றல் (ஆ) அத்துடன் மிகுதல், திரிதல் (இ) வல்லெழுத்து உறழ்தல் என்னும் மூவகை மாற்றங்களையும் அடைதல்.
(அ) புளிகுறைத்தான் → புளி + குறைத்தான் → இயல்பு

புளிமரக் கிளவிக்கு அம்மே சாரியை (நூ.245) என்னும் விதிப்படி சாரியை பெறாமல் புளி குறைத்தான் என இயல்பாய் நின்றது.

(ஆ) புளிக்குறைத்தான் → புளி+குறைத்தான் → மிகுதல் (புளிங் குறைத்தான்)

மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே (நூ. 218)என்னும் விதிப்படி மெல்லெழுத்துப் பெறாமல் புளித்குறைத்தான் எனத் திரிந்து நின்றது.

(இ) ஆல் + குறைத்தான் → ஆல் குறைத்தான் / ஆற் குறைத்தான் } உறழ்ச்சி

பூல்வேல் .... அம்இடை வருமே (நூ. 376)என்னும் விதிப்படி ஆல் என்பது அம் சாரியை பெறவேண்டும். ஆனால் அச்சாரியை பெறாமல் ஆல் குறைத்தான்; ஆற் குறைத்தான் என உறழ்ச்சி முடிபைப் பெற்றது.

8. **உயர்திணைப் பெயரிடத்து இரண்டாம் வேற்றுமை உருபு மறையாமல் வெளிப்பட்டுத் தோன்றுதல்.**

நம்பியைக் கொணர்ந்தான் → நம்பி+கொணர்ந்தான்→நம்பி கொணர்ந்தான்

உயிர்ஈ றாகிய ......இயல்புஎன மொழிப (நூ. 154) என்னும் விதிப்படி இயல்பாகப் புணராமல் வேற்றுமை உருபு வெளிப்பட்டு நின்றது.

9. **அஃறிணை விரவுப் பெயரிலும் இரண்டாம் வேற்றுமை உருபு மறையாமல் வெளிப்பட்டு நிற்றல்.**

கொற்றனைக் கொணர்ந்தான் → கொற்றன்+கொணர்ந்தான் → கொற்றன் கொணர்ந்தான்.

புள்ளி இறுதியும் (நூ. 202) எனத் தொடங்கும் நூற்பாவில் அமைந்த தேருங்காலை என்னும் விளக்கத்திலிருந்து வேற்றுமை உருபு மறைந்து வரவேண்டியது வெளிப்பட்டு நின்றது.

10. **மெய்யெழுத்துத் திரிய வேண்டிய இடத்தில் இயல்பாக வருதல்.**

மண்கொணர்ந்தான் → மண் + கொணர்ந்தான் → மட்கொணர்ந்தான் (மண்ணைக் கொண்டு வந்தான்)

ணகார ...டகாரம் ஆகும். (நூ. 303) என்னும் விதிப்படி மட்கொணர்ந்தான் என வராமல் இயல்பாய் நின்றது.

11. பிறவும் என்றதனால் கழியைக் குறைத்தான், தினையைப் பிளந்தான் என விரிந்து நிற்க வேண்டியவை கழிகுறைத்தான், தினைபிளந்தான் என இயல்பாய் நின்றன என்பர் இளம்பூரணர். எம்மைக் கண்டு என்பது எங்கண்டு - எக்கண்டு எனவும் நம்மைப் புணர்தல் என்பது நம்புணர்வு - நப்புணர்வு எனவும் திரிந்தது என்பர் நச்சினார்க்கினியர்.

(15)

## அல்வழியில் இகர, ஐகார ஈறுகள் புணரும் முறை

**159. வேற்றுமை அல்வழி இஐ என்னும்**
**ஈற்றுப்பெயர்க் கிளவி மூவகை நிலைய;**
**அவைதாம்**
**இயல்புஆ குநவும்[1] வல்லெழுத்து மிகுநவும்[2]**
**உறழ்ஆ குநவும்[3] என்மனார் புலவர்.**

[இ-ள்] வேற்றுமை அல்லாதது அல்வழிப் புணர்ச்சியாகும். அப்புணர்ச்சியில் இகர, ஐகாரங்களை ஈறாக உடைய பெயர்ச்சொல் மூவகை முடிபுகளைப் பெறும். அவை 1.இயல்பாதல் 2.வல்லெழுத்து மிகுதல் 3. உறழ்ந்து முடிதல் என்பனவாம் என்று சொல்லுவர் புலவர்.

[எ-டு]

இகர இறுதி

பருத்தி+குறிது → பருத்தி குறிது (இயல்பு)
அலி+கொற்றன் → அலிக்கொற்றன் (மிகுதல்)
கிளி+குறிது → கிளிகுறிது; கிளிக்குறிது (உறழ்ச்சி)

ஐகார இறுதி

அரை+குறிது → அரை குறிது (இயல்பு)
புலை+ கொற்றன் → புலைக்கொற்றன் (மிகுதல்)
தினை+குறிது → தினைகுறிது; தினைக்குறிது (உறழ்ச்சி)

(அலிக்கொற்றன்; புலைக் கொற்றன் - இருபெயரொட்டு) (16)

## இகர, ஐகார ஈற்று இடப்பொருள் சொற்கள் புணரும் முறை

**160. சுட்டுமுத லாகிய இகர இறுதியும்[1]**
**எகரமுதல் வினாவின் இகர இறுதியும்[2]**
**சுட்டுச்சினை நீடிய ஐஎன் இறுதியும்[3]**
**யாஎன் வினாவின் ஐஎன் இறுதியும்[4]**
**வல்லெழுத்து மிகுநவும் உறழ்ஆ குநவும்**
**சொல்லிய மருங்கின் உளஎன மொழிப.**

[இ-ள்] 1. சுட்டெழுத்தினை முதலாக உடைய இகர ஈற்று இடைச்சொல் 2.எகரமாகிய வினா எழுத்தினை முதலாக உடைய இகர ஈற்று இடைச்சொல் 3.சுட்டாகிய உறுப்பெழுத்து நீண்ட ஐகார ஈற்று இடைச்சொல் 4.யா என்னும் வினா எழுத்தினை முதலாக உடைய ஐகார ஈற்று இடைச்சொல் ஆகியவை நிலைமொழியாக நிற்கும். அவ்விடத்து வல்லெழுத்தை முதலாக உடைய சொல் வந்து புணர (இயல்பு புணர்ச்சி நீங்கலாக ஏனைய) வல்லெழுத்து மிகுதல், உறழ்ந்து வருதல் என்னும் இருவகை முடிபினைப் பெறும் என்று சொல்லுவர் புலவர். [எ-டு]

1. அதோளி, இதோளி, உதோளி; அவ்வழி, இவ்வழி, உவ்வழி என்பன இகர ஈற்றுச் சுட்டுச்சொற்கள்

அதோளி+கொண்டான் → அதோளிக்கொண்டான் (மிகுதல்)

அவ்வழி+கொண்டான் → அவ்வழி கொண்டான் / அவ்வழிக் கொண்டான் } உறழ்ச்சி

2. எதோளி, எவ்வழி - எகர முதல் வினாவின் இகர இறுதிகள்

எதோளி+கொண்டான் → எதோளிக் கொண்டான் (மிகுதல்)

எவ்வழி+கொண்டான் → எவ்வழி கொண்டான் / எவ்வழிக்கொண்டான் } உறழ்ச்சி

3. ஆண்டை, ஈண்டை, ஊண்டை ; ஆங்கவை, ஈங்கவை, ஊங்கவை என்பன அ,இ,உ என்னும் சுட்டெழுத்துக்கள் நீண்ட (ஆ,ஈ,ஊ) ஐகார இறுதிகள்.

ஆண்டை+கொண்டான் →ஆண்டைக் கொண்டான் (மிகுதல்)

ஆங்கவை+கொண்டான் → ஆங்கவை கொண்டான் / ஆங்கவைக் கொண்டான் } உறழ்ச்சி

4. யாண்டை, யாங்கவை - யா முதல் வினாவின் ஐகார இறுதிகள்.

யாண்டை+கொண்டான் → யாண்டைக் கொண்டான் (மிகுதல்)

யாங்கவை+கொண்டான் → யாங்கவை கொண்டான் / யாங்கவைக் கொண்டான் } உறழ்ச்சி

அதோளி; ஆண்டை போன்றவை முற்காலத்தில் இடப்பொருளைக் குறித்தன. எதோளி, யாண்டை, யாங்கவை என்பன இடப் பொருண்மையைக் குறிக்கும் வினாச்சொற்கள் ஆகும். (17)

## நெடில், குறில்களை அடுத்த ஒற்றுக்கள் புணரும் முறை

**161.** **நெடியதன் முன்னர் ஒற்றுமெய் கெடுதலும்[1]**
**குறியதன் முன்னர்த் தன்உருபு இரட்டலும்[2]**
**அறியத் தோன்றிய நெறியியல் என்ப.**

**[இ-ள்]** 1. நெட்டெழுத்தை அடுத்து நிற்கும் ஒற்றெழுத்துக் கெடுதல் 2. குற்றெழுத்தை அடுத்து நிற்கும் ஒற்றெழுத்து இரட்டித்தல் என்பன புணர்ச்சியில் ஏற்படும் திரிபுகளாகும். இவ்விரண்டும் வழக்கின்கண் வழிவழியாகப் பின்பற்றப்படும் முறை என்று சொல்லுவர் புலவர். **[எ-டு]**

1. கோள்+தீது → கோறீது (எழுவாய்த்தொடர்)
(நெடிலை அடுத்த ளகரம் கெட்டது) நிலைமொழியில் ண்,ன்,ம்,ல்,ள் என்னும் ஐந்து எழுத்துக்கள் நெட்டெழுத்தை அடுத்து நிற்க வருமொழியில் தகர, நகரங்கள் வந்தால் நிலைமொழியின் ஈறுகெடும் என்பர் நச்சினார்க்கினியர்.

2. பொன்+அகல் → பொன்ன்+அகல் → பொன்னகல்

(தனிக்குறிலை அடுத்த ஒற்று இரட்டித்தல்) வருமொழியில் உயிரெழுத்து வந்தால் மட்டுமே நிலைமொழியின் ஈறு இரட்டிக்கும் என்பர் இளம்பூரணர். *(18)*

## நெடுமுதல் குறுகும் மொழிகள் உருபுகளோடு புணரும் முறை

162. **ஆறன் உருபினும் நான்கன் உருபினும்**
**கூறிய குற்றொற்று இரட்டல் இல்லை**
**ஈறாகு புள்ளி அகரமொடு நிலையும்**
**நெடுமுதல் குறுகும் மொழிமுன் னான.**

**[இ-ள்]** நெடுமுதல் குறுகும் மொழிகளின் முன் ஆறாம் வேற்றுமைக்குரிய 'அது' என்னும் உருபும் நான்காம் வேற்றுமைக்குரிய 'கு' என்னும் உருபும் வந்து புணரும். அவ்விடத்து நெடுமுதல் குறுகிய மொழிகளின் ஈற்றெழுத்து இரட்டிக்காமல் அவற்றுடன் அகரம் புணர்ந்து நிற்கும். **[எ-டு]**

நாம்+அது → நம்+அது → நம+அது → நமது (நூ.115 அது அகரம் கெடல்)

தாம்+கு → தம்+அ+கு → தம+கு → தமக்கு (நூ.114. வலிமிகல்)

**விளக்கம்**

குறிலை அடுத்து நிற்கும் ஒற்றின் முன் உயிர்வரின் இரட்டும் என்பது பொதுவிதி (நூ. 168). அது இவ்விடத்திற்குப் பொருந்தாது. *(19)*

## 'நும்' என்னும் பெயர் ஒற்று இரட்டாமை

163. **நும்என் இறுதியும் அந்நிலை திரியாது.**

**[இ-ள்]** நும் என்பது முன்னிலைப் பன்மைப் பெயர். அது மேற்கூறப்பட்டது போல் அகரம் பெற்று ஒற்று இரட்டாமல் உருபுகளோடு புணரும். **[எ-டு]**

நும்+அது → நும்+அ+அது → நும+அது → நுமது
நும்+கு → நும்+அ+கு → நும+கு → நுமக்கு *(20)*

## முன்னிலை வினை உகரம் பெறாமல் நிற்றல்

164. **உகரமொடு புணரும் புள்ளி இறுதி**
**யகரமும் உயிரும் வருவழி இயற்கை.**

**[இ-ள்]** புள்ளியை ஈறாக உடைய சொற்கள் நிலைமொழியாய் நின்று வருமொழியோடு புணரும் போது உகரத்தைப் பெற்று முடியும். அவ்வீறுகள் யகரமும் உயிரெழுத்தும் வருமொழியாய் வர உகரம் பெறாமல் இயல்பாய் முடியும். **[எ-டு]**

உரிஞ்+யானா → உரிஞ்யானா
உரிஞ்+அனந்தா → உரிஞ்அனந்தா

உகரம் பெறும் புள்ளி ஈறுகள் எட்டு. அவை ஞ் (நூ. 297), ந் (நூ. 299), ண் (நூ. 307), ம் (நூ. 323), ன் (நூ. 346), ல் (நூ. 374), வ் (383), ள் (நூ.402) என்பனவாகும். **(21)**

## புணர்ச்சியில் ஏகாரச் சாரியை தோன்றுமிடம்

**165. உயிரும் புள்ளியும் இறுதி ஆகி**
**அளவும்[1] நிறையும்[2] எண்ணும்[3] சுட்டி**
**உளவெனப் பட்ட எல்லாச் சொல்லும்**
**தத்தம் கிளவி தம்மகப் பட்ட**
**முத்தை வரூஉம் காலம் தோன்றின்**
**ஒத்தது என்ப ஏஎன் சாரியை.**

**[இ-ள்]** உயிரையும் மெய்யையும் இறுதியாக உடைய 1.அளவுப் பெயர் 2.நிறைப்பெயர் 3. எண்ணுப்பெயர் ஆகிய மூன்றும் நிலைமொழியாய் நிற்கும். அம்மூவகைப்பட்ட பெயர்களுக்கு முன் அவற்றை விடக் குறைந்த அளவினை உடைய அவ்வவ் இனப்பெயர்கள் வந்து புணரும். அவ்விடத்து ஏ என்னும் சாரியை தோன்றும். **[எ-டு]**

1. அளவுப் பெயர்

உழக்கு+ஆழாக்கு → உழக்கு+ஏ+ஆழாக்கு → உழக்கே ஆழாக்கு

(உழக்கு - கால் (1/4) படி; ஆழாக்கு - அரைக்கால் (1/8) படி

கலன்+பதக்கு → கலன்+ஏ+பதக்கு → கலனேபதக்கு

(கலன் - 12 மரக்கால்; பதக்கு - 2 மரக்கால்)

2. நிறைப்பெயர்

தொடி+கஃசு → தொடி+ஏ+கஃசு → தொடியே கஃசு

(தொடி - 1 பலம்; கஃசு - 1/4 பலம்)

கொள்+ஐயவி → கொள்+ஏ+ஐயவி → கொள்ளே ஐயவி

(கொள் - கொள்ளு; ஐயவி - சிறுகடுகு)

3. எண்ணுப்பெயர்

இரண்டு+கால் → இரண்டு+ஏ+கால் → இரண்டே கால்
ஏழ்+முக்கால் → ஏழ்+ஏ+முக்கால் → ஏழே முக்கால்

உழக்கும் ஆழாக்கும்; கலனும் பதக்கும்; தொடியும் கஃசும்; கொள்ளும் ஐயவியும்; இரண்டும் காலும்; ஏழும் முக்காலும் ஆகிய அனைத்தும் உம்மைத் தொகை. **(22)**

### புணர்ச்சியில் ஏகாரச் சாரியை தோன்றாத இடம்

**166. அரைஎன வரூஉம் பால்வரை கிளவிக்குப்**
**புரைவது அன்றால் சாரியை இயற்கை.**

**[இ-ள்]** மேல் கூறப்பட்ட பெயர்களின் முன் அவற்றின் கூறுபாட்டை வரையறுக்கும் அரை என்னும் சொல் வந்து புணரும். அப்புணர்ச்சியில் ஏ என்னும் சாரியை தோன்றுவது பொருத்த மற்றதாகும். **[எ-டு]**

உழக்கு+அரை → உழக்கரை (அளவுப்பெயர்)
தொடி+அரை → தொடியரை (நிறைப்பெயர்)
ஒன்று+அரை → ஒன்றரை (எண்ணுப்பெயர்) **(23)**

### அளவு, நிறை, எண்ணுப்பெயர்கள் 'குறை' என்பதோடு புணர்தல்

**167. குறைஎன் கிளவி முன்வரு காலை**
**நிறையத் தோன்றும் வேற்றுமை இயற்கை.**

**[இ-ள்]** மேற்கூறப்பட்ட அளவு முதலான பெயர்கள் நிலைமொழியாய் நிற்க வருமொழியில் குறை என்னும் பெயர் வந்து புணரும். அவ்விடத்தில் ஏ என்னும் சாரியை பெறாது. வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கு (நூ.236) ஏற்பப் பெரும்பாலான இடங்களில் வல்லெழுத்து மிக்கும் திரிந்தும் முடியும். **[எ-டு]**

உரி+குறை → உரிக்குறை → அளவுப்பெயர் }
தொடி+குறை → தொடிக்குறை → நிறைப்பெயர் } மிகுதல்

கால்+குறை → காற்குறை → எண்ணுப்பெயர் (திரிதல்)
(உரி - அரைப்(½) படி) **(24)**

### குற்றியலுகரப் பெயர்கள் 'இன்' சாரியை பெறுதல்

**168. குற்றிய லுகரக்கு இன்னே சாரியை.**

**[இ-ள்]** குற்றியலுகரத்தை ஈறாக உடைய அளவுப் பெயர், நிறைப்பெயர், எண்ணுப்பெயர்களின் முன் குறை என்னும் சொல் வந்து புணரும். அப்புணர்ச்சியில் மேற்கூறிய வேற்றுமைப் புணர்ச்சியின் முடிபைப் பெறாமல் 'இன்' சாரியை பெற்று முடியும். **[எ-டு]**

உழக்கு+குறை → உழக்கு+இன்+குறை → உழக்கின் குறை (அளவு)
கழஞ்சு+குறை → கழஞ்சு+இன்+குறை → கழஞ்சின் குறை (நிறை)
ஒன்று+குறை → ஒன்று+இன்+குறை → ஒன்றின் குறை (எண்) **(25)**

## 'கலம்' என்னும் அளவுப்பெயர் அத்துச்சாரியை பெறுதல்

**169. அத்துஇடை வரூஉம் கலம்என் அளவே.**

[இ-ள்] கலம் என்னும் சொல் நிலைமொழியாய் நிற்கக் குறை என்னும் சொல் வருமொழியாய் வரும். அவற்றிற்கு இடையில் அத்துச்சாரியை தோன்றும். [எ-டு] கலத்துக்குறை

கலம்+குறை → கலம்+குறை → கல+அத்து+குறை → கலத்து+க்+குறை → கலத்துக்குறை (26)

## அளவு, நிறைப்பெயர்கள் 'இன்' சாரியை பெறுதல்

**170. பனைஎன் அளவும்[1] காஎன் நிறையும்[2]**
**நினையும் காலை இன்னொடு சிவணும்.**

[இ-ள்] 1. பனை என்பது அளவுப்பெயர் 2.கா என்பது நிறைப்பெயர். இவ்விரு பெயர்களும் குறை என்னும் வருமொழியோடு புணரும். ஆராய்ந்து பார்க்க அவை இன் சாரியை பொருந்தி நிற்கும். [எ-டு]

1. பனை+குறை → பனை+இன்+குறை → பனையின்குறை
2. கா+குறை → கா+இன்+குறை → காவின்குறை. (27)

## அளவு, நிறைப்பெயர்களுக்கு முதலாகும் எழுத்துக்கள்

**171. அளவிற்கும் நிறையிற்கும் மொழிமுதல் ஆகி**
**உளஎனப் பட்ட ஒன்பதிற்று எழுத்தே;**
**அவைதாம்**
**க[1]ச[2]த[3]ப[4] என்றா ந[5]ம[6]வ[7] என்றா**
**அகர[8] உகரமோடு[9] அவைஎன மொழிப.**

[இ-ள்] 1.க 2.ச 3.த 4.ப என்னும் வல்லெழுத்துக்கள் நான்கு 5.ந 6.ம என்னும் மெல்லெழுத்துக்கள் இரண்டு 7.வ என்னும் இடையெழுத்து ஒன்று 8.அ 9.உ என்னும் உயிரெழுத்துக்கள் இரண்டு ஆகிய இவ்வொன்பது எழுத்துக்களையும் முதலாகக் கொண்டு அளவுப் பெயரும் நிறைப்பெயரும் அமையும் என்று சொல்லுவர் புலவர். [எ-டு]

அளவுப்பெயர்

கலம், சாடி, தூதை, பானை, நாழி, மண்டை, வட்டில், அகல், உழக்கு.

நிறைப்பெயர்

கழஞ்சு, சீரகம், தொடி, பலம், நிறை, மா, வரை, அந்தை, உழுந்து.

(28)

தொகை மரபிற்குப் புறனடை.

172. **ஈறியல் மருங்கின் இவைஇவற்று இயல்புஎனக்**
**கூறிய கிளவிப் பல்லாறு எல்லாம்**
**மெய்த்தலைப் பட்ட வழக்கொடு சிவணி**
**ஒத்தவை உரிய புணர்மொழி நிலையே.**

**[இ-ள்]** உயிரையும் மெய்யையும் இறுதியாக உடைய சொற்கள் நிலைமொழியாய் நிற்க அவை இன்னின்ன வருமொழியோடு இன்னவாறு புணரும் என முடிபு கூறப்பட்டன. அவ்விதிகளோடு பொருந்தி வராத புணர்ச்சி முடிபுகளும் உள்ளன. அவற்றுள் உலக வழக்கோடு பொருந்தி வருவனவற்றை ஆராய்ந்து பார்த்துப் புணர்மொழிகளாக அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். **[எ-டு]**

பதக்கு+நானாழி என்பது ஏ சாரியை (நூ. 165) பெறாமல் அக்குச் சாரியை பெற்றுப் பதக்க நானாழி என நின்றது.

வாள்+தானை என்பது நிலைமொழி ஈறு கெடாமல் (நூ.161) வாட்டானை எனப் புணர்ந்தது. ***(29)***

மரூஉச் சொல் முடிபுகள்

173. **பலர்அறி சொல்முன் யாவர் என்னும்**
**பெயர்இடை வகரம் கெடுதலும்[1] ஏனை**
**ஒன்றுஅறி சொல்முன் யாதுஎன் வினாஇடை**
**ஒன்றிய வகரம் வருதலும்[2] இரண்டும்**
**மருவின் பாத்தியின் திரியுமன் பயின்றே.**

**[இ-ள்]** *1.* உயர்திணையில் பலர்பாலுக்குரிய சொல் அவர் என்பதாகும். அச்சொல்லின் முன் யாவர் என்னும் சொல் வந்து புணரும். அப்புணர்ச்சியில் யாவர் என்னும் பெயரில் நின்ற வகரம் கெட்டு யார் என நிற்கும் 2. அஃறிணையில் ஒன்றன் பாலுக்குரிய சொல் அது என்பதாகும். அச்சொல்லின் முன் யாது என்னும் வினாச்சொல் வந்து புணரும். அவ்வினாப் பெயரின் இடையில் வகரம் தோன்றி யாவது எனத் திரியும். இவ்வாறு வரும் இரண்டும் மரூஉச் சொற்களாக வழக்கில் இடம்பெறும். **[எ-டு]**

1. அவர்+யாவர் → அவர் யார் (வகரம் கெட்டது)
2. அது+யாது → அது யாவது (வகரம் மிகுந்தது)

யாவர் → உயர்திணை வினாப்பெயர்
யாது → அஃறிணை வினாப்பெயர் ***(30)***

# ௬. உருபியல்

பெயர்ச்சொற்களோடு வேற்றுமை உருபுகள் புணரும் புணர்ச்சியை எடுத்துரைப்பதால் இவ்வியல் **உருபியல்** எனப்பெயர் பெற்றது. வேற்றுமை உருபுகள் நிலைமொழியோடு கூடுகின்ற பொழுது சாரியை பெற்றும் சாரியை பெறாமலும் புணரும். அப்புணர்ச்சியில் மாற்றங்களும் உண்டு; இயல்பும் உண்டு. அச்செய்திகளை எல்லாம் தொகுத்துக் கூறுவதே இவ்வியலாகும். பெயர்ச்சொற்கள் உருபுகளோடு புணரும் புணர்ச்சியை நன்னூலார் உருபுபுணரியல் எனக் கூறுவதும் ஈண்டு ஒப்பிடத் தக்கதாகும். உருபியலில் அமைந்த நூற்பாக்கள் **30.**

உருபியல் கூறும் செய்திகளைச் *1.*சாரியை பெறும் உயிரீறுகள் *2.* சாரியை பெறும் மெய்யீறுகள் *3.* சாரியை பெறும் குற்றியலுகர, முற்றியலுகர ஈறுகள் *4.* சாரியை பெறாது இயல்பாயும் திரிந்தும் வரும் நிலைமொழிகள் *5.* புறனடை என ஐந்தாகப் பாகுபடுத்தலாம்.

### வேற்றுமையில் ‘இன்’ சாரியை பெறும் உயிரீறுகள் (6)

**174.** **அ[1]ஆ[2] உ[3]ஊ[4] ஏ[5]ஔ[6] என்னும்**
**அப்பால் ஆறன் நிலைமொழி முன்னர்**
**வேற்றுமை உருபிற்கு இன்னே சாரியை.**

**[இ-ள்]** *1.*அ *2.*ஆ *3.*உ *4.*ஊ *5.*ஏ *6.*ஔ என்று சொல்லப்படுகின்ற ஆறு உயிரீறுகளை உடைய பெயர்கள் நிலைமொழிகளாய் நிற்கும். அவை வேற்றுமை உருபுகளோடு புணரும் போது இடையில் இன் சாரியை பெறும். **[எ-டு]**

1. விள+ஐ → விள+இன்+ஐ → விளவினை
2. பலா+ஐ → பலா+இன்+ஐ → பலாவினை
3. கடு+ஐ → கடு+இன்+ஐ → கடுவினை
4. பூ+ஐ → பூ+இன்+ஐ → பூவினை
5. சே+ஐ → சே+இன்+ஐ → சேவினை
6. வெள+ஐ → வெள+இன்+ஐ → வெளவினை

இவ்வெடுத்துக்காட்டுகள் ஒடு, கு, இன், அது, கண் என்னும் வேற்றுமை உருபுகளுக்கும் பொருந்தும்.

*(1)*

## அகர ஈற்றுப் பன்மைப்பெயர் வற்றுச் சாரியை பெறுதல்

**175. பல்லவை நுதலிய அகர இறுபெயர்**
**வற்றொடு சிவணல் எச்சம் இன்றே.**

**[இ-ள்]** பன்மைப் பொருளைத் தரும் அகர ஈற்றுச் சொற்கள் நிலைமொழியாய் நின்று வேற்றுமை உருபுகளோடு புணரும். அந்நிலையில் முற்கூறப்பட்ட இன் சாரியை பெறாமல் வற்றுச் சாரியை பொருந்தி நிற்கும். அதனை நீக்காமல் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அகர ஈற்றுப் பன்மைப் பெயர்களாவன; பல்ல, பல, சில, உள்ள, இல்ல. **[எ-டு]**

பல+ஐ → பல+வற்று+ஐ → பலவற்றை

உள்ள+ஒடு → உள்ள+வற்று+ஒடு → உள்ளவற்றொடு (2)

## 'யா' என்னும் வினா வற்றுச் சாரியை பெறுதல்

**176. யாஎன் வினாவும் ஆயியல் திரியாது.**

**[இ-ள்]** யா என்பது ஆகார ஈற்று வினாப்பெயர் ஆகும். அப்பெயரும் மேற்கூறிய வற்றுச் சாரியை பெற்று முடியும் என்னும் விதியிலிருந்து மாறாது. **[எ-டு]** யாவற்றை

யா+ஐ → யா+வற்று+ஐ → யாவற்றை. (3)

## உகர ஈற்றுச் சுட்டு 'அன்' சாரியை பெறுதல்

**177. சுட்டுமுதல் உகரம் அன்னொடு சிவணி**
**ஒட்டிய மெய்ஒழித்து உகரம் கெடுமே.**

**[இ-ள்]** சுட்டெழுத்தினை முதலாக உடைய உகர ஈற்றுப் பெயர்கள் (அது, இது, உது) நிலைமொழியாய் நிற்கும். அப்பெயர் உருபேற்கும் போது அன் சாரியை பெறும். அப்புணர்ச்சியில் நிலைமொழியில் ஈறாகிய து என்பதில் உள்ள தகரம் (த்) நிற்க உகரம் (உ) மட்டும் கெடும். **[எ-டு]** அதனை

அது+ஐ → அது+அன்+ஐ → அத்+அன்+ஐ → அதனை (4)

## ஐகார ஈற்றுச் சுட்டு வற்றுச் சாரியை பெறுதல்

**178. சுட்டுமுத லாகிய ஐஎன் இறுதி**
**வற்றொடு சிவணி நிற்றலும் உரித்தே.**

**[இ-ள்]** சுட்டெழுத்தை முதலாக உடைய ஐகார ஈற்றுச் சொற்கள் (அவை, இவை, உவை) நிலைமொழியாய் நிற்கும். அச்சொற்கள் உருபேற்கும் போது வற்றுச் சாரியை பொருந்தி நிற்பதற்கும் உரியனவாகும். **[எ-டு]** அவையற்றை

அவை+ஐ → அவை+வற்று+ஐ

அவை+வ்அற்று+ஐ → வற்றின் வகரம் (வ்) கெட்டது (நூ.122)

அவை+அற்று+ஐ → அவை+ய்+அற்று+ஐ → (உடம்படுமெய் தோன்றியது).

அவை+யற்று+ஐ → அவையற்றை

நிற்றலும் என்ற உம்மையான் வற்றுடன் இன் சாரியை பெறுதலும் உண்டு. [எ-டு]

அவை+வற்று+இன்+கு → அவையற்றிற்கு

அவை+வற்று+இன்+கண் → அவையற்றின்கண் (5)

## ஐகார ஈற்று வினாவும் (யாவை) வற்றுச் சாரியை பெறுதல்

**179. யாஎன் வினாவின் ஐஎன் இறுதியும்**
**ஆயியல் திரியாது என்மனார் புலவர்**
**ஆவயின் வகரம் ஐயொடும் கெடுமே.**

[இ-ள்] யா என்னும் வினாவினை உடைய ஐகார ஈற்றுப் பன்மைச் சொல் (யாவை) நிலைமொழியாய் நின்று உருபேற்கும். அப்புணர்ச்சியில் சுட்டெழுத்தை முதலாக உடைய ஐகார ஈற்றுப் பெயர் போல (நூ.178) வற்றுச்சாரியை பெறும் என்று சொல்லுவர் புலவர். அவ்விடத்து நிலைமொழியின் ஈறாகிய வகரம் ஐகாரத்தோடும் (வை) கெடும். [எ-டு] யாவற்றை

யாவை+ஐ → யாவை+வற்று+ஐ → யாவ்ஐ+வற்று+ஐ → யா+வற்று+ஐ → யாவற்றை. (6)

## 'நீ' என்னும் பெயர் உருபேற்கும் முறை

**180. நீஎன் ஒருபெயர் நெடுமுதல் குறுகும்**
**ஆவயின் னகரம் ஒற்றுஆ கும்மே.**

[இ-ள்] நீ என்பது முன்னிலை ஒருமைப்பெயர். அப்பெயர் நிலைமொழியாக நின்று உருபேற்கும். அந்நிலையில் நீ என்பதில் உள்ள ஈகாரம் இகரமாய்க் குறுகி நிற்கும் (நி). அதனையடுத்து னகரம் ஒற்றாக வரும். [எ-டு]

நீ+ஐ → நி+ஐ → நி+ன்+ஐ → நின்ன்+ஐ → நின்னை

நீ+ஒடு → நி+ஒடு → நி+ன்+ஒடு → நின்ன்+ஒடு → நின்னொடு

'நீ' என்னும் பெயர் 'நி' எனக்குறுகி னகரத்தை(ன்) எழுத்துப்பேறாகக் கொண்டே உருபேற்கும். (7)

## ஒகார ஈற்றுப் பெயர் 'ஒன்' சாரியை பெறுதல்

**181. ஒகார இறுதிக்கு ஒன்னே சாரியை.**

[இ-ள்] ஒகாரத்தை ஈறாக உடைய பெயர்கள் நிலைமொழியாய் நின்று வேற்றுமை உருபுகளோடு புணரும். அவற்றின் இடையில் ஒன் என்னும் சாரியை வரும். [எ-டு]

கோ+ஐ → கோ+ஒன்+ஐ → கோஒனை.

சிறுபான்மை இன் சாரியையும் வரும்.

கோ+ஐ → கோ+இன்+ஐ → கோவினை (8)

**அகர, ஆகார ஈற்று மரப்பெயர்கள் அத்துச் சாரியை பெறுதல்**

**182. அஆ என்னும் மரப்பெயர்க் கிளவிக்கு
அத்தொடும் சிவணும் ஏழன் உருபே.**

**[இ-ள்]** அகர, ஆகாரத்தை ஈறாக உடைய மரப்பெயர்கள் கண் என்னும் ஏழாம் வேற்றுமை உருபொடு புணரும். அவ்விடத்து அத்துச் சாரியையும் பொருந்தி வரும். **[எ-டு]**

விள+கண் → விள+அத்து+கண் → விளவத்துக்கண்

பலா+கண் → பலா+அத்து+கண் → பலாவத்துக்கண்

அகர, ஆகார ஈறுகள் இன் சாரியை பெறுதல் முற்கூறப்பட்டது (நூ.173). (9)

**ஞ், ந் ஈற்றுப் பெயர்கள் 'இன்' சாரியை பெறுதல்**

**183. ஞநஎன் புள்ளிக்கு இன்னே சாரியை.**

**[இ-ள்]** ஞகர, நகரத்தை ஈறாக உடைய புள்ளியீற்றுப் பெயர்கள் உருபோடு புணரும். அப்போது இன் சாரியை பெற்று முடியும். **[எ-டு]** உரிஞினை, பொருநினை

உரிஞ்+ஐ → உரிஞ்+இன்+ஐ → உரிஞினை

பொருந்+ஐ → பொருந்+இன்+ஐ → பொருநினை (10)

**வகர ஈற்றுச் சுட்டுப்பெயர் வற்றுச் சாரியை பெறுதல்**

**184. சுட்டுமுதல் வகரம் ஐயும் மெய்யும்
கெட்ட இறுதி இயல்திரிபு இன்றே.**

**[இ-ள்]** சுட்டெழுத்தை முதலாக உடைய வகர ஈற்றுச்சொற்கள் அவ், இவ், உவ் என்பனவாகும். அச்சொற்கள் உருபோடு புணரும் போது யாவை என்னும் சொல்லில் உள்ள வகர ஐகார ஈறு(வை)கெட்டது போல (நூ.179) ஈறாகிய வகர ஒற்று (வ்) கெடும். வற்றுச் சாரியை பெற்று முடியும். **[எ-டு]**

(யாவை+ஐ → யாவ்+வற்று+ஐ → யாவற்றை - நூ.179)

அவ்+ஐ → அவ்+வற்று+ஐ → அவ்+வற்று+ஐ → அவற்றை (11)

**'தெவ்' என்னும் பெயர் 'இன்' சாரியை பெறுதல்**

**185. ஏனை வகரம் இன்னொடு சிவணும்.**

**[இ-ள்]** சுட்டெழுத்தினை முதலில் பெறாத வகர ஈற்றுப் பெயர் தெவ் என்பதாகும். அது இன் சாரியை பொருந்தி முடியும். **[எ-டு]**

தெவ்+ஐ → தெவ்+இன்+ஐ → தெவ்வினை

தெவ் - பகைமை → உரிச்சொல் ; தெவ்(வர்) பகைவனை உணர்த்தும் போது பெயர்ச்சொல். (12)

## மகர ஈற்றுப் பெயர் 'அத்துச்' சாரியை பெறுதல்

**186. மஃகான் புள்ளிமுன் அத்தே சாரியை.**

[இ-ள்] மகரத்தை ஈறாக உடைய பெயர்ச்சொற்கள் உருபேற்கும் போது அத்துச் சாரியை பெறும். [எ-டு]

மரம்+ஐ → மரம்+அத்து+ஐ → மரத்தை

நுகம்+ஐ → நுகம்+அத்து+ஐ → நுகத்தை

பணம்+ஐ → பணம்+அத்து+ஐ → பணத்தை

இவ்விதிப்படி மனம்+அத்து+இல் → மனத்தில்

அளவோடு பெற்று வளத்தோடு வாழ்க;

வாழ்க வளத்துடன்

என எழுதுவதே பிழையற்றவையாகும். மனதில், வளமோடு, வளமுடன் என்பவை பிழையானவை. (13)

## மகர ஈற்றுப் பெயர்கள் 'இன்' சாரியையும் பெறுதல்

**187. இன்இடை வரூஉம் மொழியுமார் உளவே.**

[இ-ள்] மகர ஈற்றுச் சொற்களுள் சில அத்துச் சாரியையே அல்லாமல் இன் சாரியை பெற்றும் முடியும். [எ-டு]

உரும்+ஐ → உரும்+இன்+ஐ → உருமினை (14)

## சாரியை பெறாத மகர ஈற்றுப் பெயர்

**188. நும்என் இறுதி இயற்கை ஆகும்.**

[இ-ள்] நும் என்பது மகர ஈற்று முன்னிலைப் பன்மைப் பெயர். அது மேற்கூறப்பட்ட சாரியைகளாகிய அத்து, இன் ஆகியவற்றைப் பெறாமல் இயல்பாய்ப் புணரும்.

[எ-டு] நும்+ஐ → நும்ம்+ஐ → நும்மை

குறிலை அடுத்த ஒற்று இரட்டித்தல் நும் - நும்ம் (நூ.161) (15)

## நெடுமுதல் குறுகும் மொழிகள் உருபோடு புணரும் முறை

**189. தாம்[1] நாம்[2] என்னும் மகர இறுதியும்**
**யாம்[3] என் இறுதியும் அதனோர் அன்ன;**
**ஆஎ ஆகும் யாம்என் இறுதி**
**ஆவயின் யகரமெய் கெடுதல் வேண்டும்**
**ஏனை இரண்டும் நெடுமுதல் குறுகும்.**

[இ-ள்] 1. தாம் என்பது படர்க்கைப் பன்மைப் பெயர் 2. நாம் 3. யாம் என்பன தன்மைப் பன்மைப் பெயர்கள். இம்மூன்று மகர ஈற்றுப் பெயர்களும் உருபேற்கும் போது நும் என்னும் மகர ஈற்றைப் போலச் சாரியை பெறாமல் இயல்பாய் முடியும். அம்மூன்றனுள் யாம் என்னும் சொல்லில் உள்ள மகர மெய் நிற்க யகரமெய் கெடும். அதன்மீது ஏறிய ஆகாரம் எகரமாகும். எஞ்சிய தாம், நாம் என்னும் சொற்களில் உள்ள நெட்டெழுத்துக்கள் குற்றெழுத்துக்களாகத் திரியும். [எ-டு]

யாம்+ஐ → ய்ஆம்+ஐ → ஆஎம்+ஐ → எம்+ஐ → எம்மை
தாம்+ஐ → த்ஆம்+ஐ → த்அம்+ஐ → தம்+ஐ → தம்மை
நாம்+ஐ → ந்ஆம்+ஐ → ந்அம்+ஐ → நம்+ஐ → நம்மை

**விளக்கம்**

தாம், நாம் என்பன நெடுமுதல் குறுகித் தம், நம் என்றாகும். யாம் என்பது எம் எனத் திரியும். *(16)*

## எல்லாம் என்னும் அஃறிணைச்சொல் சாரியைகளைப் பெறுதல்

**190. எல்லாம் என்னும் இறுதி முன்னர்**
**வற்றுஎன் சாரியை முற்றத் தோன்றும்**
**உம்மை நிலையும் இறுதி யான.**

[இ-ள்] எல்லாம் என்னும் மகர ஈற்றுச்சொல் இருதிணைப் பொதுப்பெயராகும். அப்பெயர் அஃறிணைப் பொருண்மையில் உருபேற்கும் போது இடையில் வற்றுச் சாரியையும் ஈற்றில் உம் சாரியையும் பெற்று முடியும். [எ-டு] எல்லாவற்றையும்
எல்லாம் +ஐ → எல்லாம்+வற்று+ஐ+உம் → எல்லாவற்றையும் (17)

## 'எல்லாம்' என்னும் உயர்திணை 'நம்' சாரியை பெறுதல்

**191. உயர்திணை ஆயின் நம்இடை வருமே.**

[இ-ள்] எல்லாம் என்னும் மகர ஈற்று விரவுப்பெயர் உயர்திணைப் பெயராய் நின்று உருபேற்கும். அப்புணர்ச்சியில் நம் என்னும் சாரியை இடையில் தோன்றும். (உம் சாரியை ஈற்றில் நிற்கும்)
எல்லாம் +ஐ → எல்லாம்+நம்+ஐ+உம் → எல்லா நம்மையும் (18)

## மகர ஈற்று இடப்பெயர்கள் உருபேற்கும் முறை

**192. எல்லாரும் என்னும் படர்க்கை இறுதியும்[1]**
**எல்லீரும் என்னும் முன்னிலை இறுதியும்[2]**
**ஒற்றும் உகரமும் கெடும்[3]என மொழிப**
**நீற்றல் வேண்டும் ரகரப் புள்ளி[4]**
**உம்மை நிலையும் இறுதி யான[5]**
**தம்இடை வரூஉம் படர்க்கை மேன[6]**
**நும்இடை வரூஉம் முன்னிலை மொழிக்கே[7].**

[இ-ள்] 1.எல்லாரும் என்பது உயர்திணைப் படர்க்கைப் பெயராகும் 2.எல்லீரும் என்பது உயர்திணை முன்னிலைப் பெயராகும். அவ்விரு பெயரும் நிலைமொழியாக நின்று உருபுகளை ஏற்கும் 3.அவ்விடத்து அவ்விரு சொற்களிலும் உள்ள ஈற்று மகர மெய்யும் அதன் முன் நிற்கும் உகரமும்(உம்) கெட்டு முடியும்.

4.ரகர மெய் (ர்) மட்டும் கெடாது நிற்கும் 5.அவ்விரு மொழிகளின் இறுதியிலும் உம் என்னும் சாரியை நிலைபெறும் 6.படர்க்கைப் பெயரின் திரிபாகிய எல்லார் என்பதன் பின் தம் என்னும் சாரியை வரும் 7.முன்னிலைப் பெயராகிய எல்லீர் என்பதன் பின் நும் என்னும் சாரியை வரும் என்று சொல்லுவர் புலவர். [எ-டு] எல்லார் தம்மையும், எல்லீர் நும்மையும்

1. எல்லாரும்+ஐ → எல்லா(ர்+உ)ம்+ஐ+உம் → எல்லார்+ஐ+உம்
   எல்லார்+தம்+ஐ+உம் → எல்லார்தம்மையும்
2. எல்லீரும்+ஐ → எல்லீ(ர்+உ)ம்+ஐ+உம் → எல்லீர்+ஐ+உம்
   எல்லீர்+நும்+ஐ+உம் → எல்லீர்நும்மையும் (19)

## நெடுமுதல் குறுகும் 'தான்', 'யான்' சாரியை பெறாமை

**193. தான்[1]யான்[2] என்னும் ஆஈர் இறுதியும்**
**மேல்முப் பெயரொடும் வேறுபாடு இலவே.**

[இ-ள்] 1.தான் 2.யான் என்பன னகர ஈற்றுத் தன்மை ஒருமைப் பெயர்கள் ஆகும். அவை உருபேற்கும் போது மேற்கூறப்பட்ட மகர ஈற்று நெடுமுதல் குறுகும் பெயர்களுக்கு உரிய விதியை (நூ.189) வேறுபாடின்றிப் பெற்று முடியும். [எ-டு]

1. தான்+ஐ → தன்+ஐ → தன்ன்+ஐ → தன்னை
2. யான்+ஐ → ய்ஆன்+ஐ → ஆஎன்+ஐ → என்+ஐ → என்ன்+ஐ → என்னை (20)

## விளக்கம்

தான் என்பது தன் எனக் குறுகும். யான் என்னும் பெயரில் உள்ள ஆகாரம் எகரமாகத் திரியும். யகரமெய் கெட்டு என் என நிற்கும்.

## அழன், புழன் என்பவை பெறும் சாரியைகள்

**194. அழனே[1] புழனே[2] ஆயிரு மொழிக்கும்**
**அத்தும் இன்னும் உறழத் தோன்றல்**
**ஒத்தது என்ப உணரு மோரே.**

[இ-ள்] 1. அழன் 2. புழன் என்பன னகர ஈற்றுப் பெயர்களாகும். இவை உருபோடு புணருகின்ற போது அத்து, இன் என்னும் இரண்டு சாரியைகளையும் பெற்று உறழ்ந்து வரும் என்று உணர்ந்தோர் கூறுவர். [எ-டு]

அழன்+ஐ → அழன்+அத்து+ஐ → அழத்தை
புழன்+ஐ → புழன்+அத்து+ஐ → புழத்தை } அத்துச் சாரியை

அழன்+ஐ → அழன்+இன்+ஐ → அழனினை
புழன்+ஐ → புழன்+இன்+ஐ → புழனினை } இன் சாரியை (21)

## ழகர ஈற்று எண்ணுப் பெயருக்குரிய சாரியை

**195. அன்னன் சாரியை ஏழன் இறுதி**
**முன்னர்த் தோன்றும் இயற்கைத்து என்ப.**

**[இ-ள்]** ஏழ் என்பது ழகர ஈற்று எண்ணுப் பெயராகும். அப்பெயர் உருபேற்கும் போது அன் சாரியை பொருந்தி நிற்கும் இயல்பினை உடையது என்று கூறுவர் புலவர். **[எ-டு]** ஏழனை

ஏழ்+ஐ → ஏழ்+அன்+ஐ → ஏழனை (22)

## குற்றியலுகர ஈறுகள் பெறும் சாரியை

**196. குற்றிய லுகரத்து இறுதி முன்னர்**
**முற்றத் தோன்றும் இன்னன் சாரியை.**

**[இ-ள்]** குற்றியலுகரத்தை ஈறாக உடைய சொற்கள் நிலைமொழிகளாய் நின்று உருபோடு புணரும். அவற்றுக்கு இடையில் இன் சாரியை பொருந்தி வரும். **[எ-டு]** வரகினை, நாகினை

வரகு+ஐ → வரகு+இன்+ஐ → வரகினை (இடைத்தொடர்)
நாகு+ஐ → நாகு+இன்+ஐ → நாகினை (நெடில் தொடர்) (23)

## ஒற்று இரட்டிக்கும் குற்றியலுகர ஈறுகள் (டு, று)

**197. நெட்டெழுத்து இம்பர் ஒற்றுமிகத் தோன்றும்**
**அப்பால் மொழிகள் அல்வழி யான.**

**[இ-ள்]** ஒற்று இரட்டிக்காது எனப் பகுக்கப்பட்ட நெடில்தொடர்க் குற்றியலுகரச் சொற்கள் உள்ளன. அவை அல்லாத நெடில்தொடர்க் குற்றியலுகரச் சொற்கள் உருபேற்கும் போது உகரம் ஏறிய மெய்யெழுத்து இரட்டித்து நிற்கும். **[எ-டு]**

யாடு+ஐ → யாட்டை
நாடு+ஐ → நாட்டை
சோறு+ஐ → சோற்றை
ஆறு+ஐ → ஆற்றை

**விளக்கம்**

உகரம் ஏறிய மெய்யெழுத்துக்கள் குற்றியலுகரம். அவை கு, சு, டு, து, பு, று. இவற்றுள் க், ச், த், ப் ஆகிய நான்கும் ஒற்று இரட்டுவதில்லை. எஞ்சிய ட், ற் மட்டுமே ஒற்று இரட்டும். **(24)**

## ஒற்று இரட்டும் குற்றியலுகர ஈறுகளுக்குச் சிறப்பு விதி

**198. அவைதாம்**
**இயற்கைய ஆகும் செயற்கைய என்ப.**

**[இ-ள்]** மேல் ஒற்று இரட்டிக்கும் எனக் கூறப்பட்டவை டகார, றகார குற்றியலுகர ஈறுகள். அவை உருபேற்கும் போது இன் சாரியை பெறாமல் இயல்பாகப் புணரும் நிலையை உடையன என்று சொல்லுவர் புலவர். **[எ-டு]**

யாடு+ஐ → யாட்டை
ஆறு+ஐ → ஆற்றை

சிறுபான்மை நெடில் தொடரும் உயிர்த்தொடரும் இன் சாரியை பெற்றும் முடியும். **[எ-டு]**

யாடு+ஐ → யாடு+இன்+ஐ → யாட்டினை
கயிறு+ஐ → கயிறு+இன்+ஐ → கயிற்றினை

**விளக்கம்**

ட், ற் என்பன இரட்டிக்கும் என்பதனை மேல் நூற்பாவில் (நூ.197) கூறினார் ஆசிரியர். அவை இன் சாரியை பெறாமல் வரும் என்பதை இந்நூற்பாவில் (நூ.198) குறிப்பிடுகிறார். **(25)**

## குற்றியலுகர ஈற்று எண்ணுப்பெயர்களுக்கு உரிய சாரியை

**199. எண்ணின் இறுதி அன்னொடு சிவணும்.**

**[இ-ள்]** குற்றியலுகர ஈற்று எண்ணுப்பெயர்கள் அன் என்னும் சாரியை பெற்று முடியும். **[எ-டு]** ஒன்றனை, இரண்டனை

ஒன்று+ஐ → ஒன்று+அன்+ஐ → ஒன்றனை
இரண்டு+ஐ → இரண்டு+அன்+ஐ → இரண்டனை **(26)**

## ஆன் சாரியை பெறும் குற்றியலுகர எண்ணுப் பெயர்கள்

**200. ஒன்றுமுத லாகப் பத்துஊர்ந்து வரூஉம்**
**எல்லா எண்ணும் சொல்லும் காலை**
**ஆன்இடை வரினும் மானம் இல்லை**
**அஃதுஎன் கிளவி ஆவயின் கெடுமே**
**உய்தல் வேண்டும் பஃகான் மெய்யே.**

[இ-ள்] ஒன்று முதலிய எண்ணுப்பெயர்கள் பத்தோடு சேர்ந்து ஒருபஃது முதல் ஒன்பஃது ஈறாக அடையடுத்து நிற்கும். அக்குற்றியலுகர எண்ணுப்பெயர்கள் உருபேற்கும் போது அன் சாரியை பெறாமல் ஆன் என்னும் சாரியை பெறுவது குற்றம் ஆகாது. அப்புணர்ச்சியில் பஃது என்னும் சொல்லில் உள்ள அஃது என்பது கெடும். பகர மெய் (ப்) மட்டும் கெடாமல் நிற்கும். [எ-டு] ஒருபானை, இருபானை

ஒன்று + பஃது → ஒருபஃது (ஒன்று என்னும் அடைபெற்ற பத்து - நிலைமொழி)

ஒருபஃது + ஐ → ஒருபஃது + ஆன் + ஐ → ஒருப் அஃது + ஆன் + ஐ → ஒருப் + ஆன் + ஐ → ஒருபான் + ஐ → ஒருபானை (27)

## யாது, அஃது என்பன பெறும் சாரியை

**201. யாதுஎன் இறுதியும்[1] சுட்டுமுதல் ஆகிய**
**ஆய்த இறுதியும்[2] அன்னொடு சிவணும்**
**ஆய்தம் கெடுதல் ஆவயி னான.**

[இ-ள்] 1.அஃறிணை ஒன்றன்பால் வினாப்பெயர் யாது என்னும் நெடில்தொடர்க் குற்றியலுகரமாகும் 2. சுட்டெழுத்தை முதலாக உடைய ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் அஃது என்பதாகும். இவ்விரு குற்றியலுகரமும் அன் சாரியையோடு பொருந்தி நிற்கும். அவ்விடத்து அஃது என்னும் சொல்லில் உள்ள ஆய்தம் கெடும். [எ-டு]

யாது + ஐ → யாது + அன் + ஐ → யாதனை
அஃது + ஐ → அஃது + அன் + ஐ → அது + அன் + ஐ → அதனை

சுட்டு முதலாகிய ஆய்த இறுதி என்பது ஆய்தத்தொடர் குற்றியலுகரத்தைக் குறிக்கும். (28)

## திசைப் பெயர்கள் சாரியை பெற்றும் பெறாமலும் வருமிடம்

**202. ஏழன் உருபிற்குத் திசைப்பெயர் முன்னர்ச்**
**சாரியை கிளவி இயற்கையும் ஆகும்[1]**
**ஆவயின் இறுதி மெய்யொடும் கெடுமே[2].**

[இ-ள்] குற்றியலுகர ஈற்றுத் திசைப்பெயர்கள் நிலைமொழியாய் நிற்கும். அவை கண் என்னும் ஏழாம் வேற்றுமை உருபோடு புணரும். அப்புணர்ச்சியில் 1.முற்கூறப்பட்ட இன் சாரியை இடம்பெறாமல் இயல்பாய் நிற்றலும் உண்டு 2. அச்சாரியை பெறாதவிடத்துத் திசைப்பெயரின் ஈற்றில் உள்ள குற்றியலுகரம் அது ஏறிய மெய்யொடும் (கு) கெடும். [எ-டு] வடக்கின்கண், வடக்கண்

1. வடக்கு+கண் → வடக்கு+இன்+கண் → வடக்கின்கண்
(இன் சாரியை)

2. வடக்கு+கண் → வடக்கு+கண் → வடக்கண்
(இயல்பில் கு கெட்டது) **(29)**

**உருபியலுக்குப் புறனடை**

**203. புள்ளி இறுதியும் உயிர்இறு கிளவியும்
சொல்லிய அல்ல ஏனைய எல்லாம்
தேருங் காலை உருபொடு சிவணிச்
சாரியை நிலையும் கடப்பாடு இலவே.**

**[இ-ள்]** மெய்யையும் உயிரையும் இறுதியாக உடைய சொற்கள் நிலைமொழியாக நிற்க அவை இன்னின்ன சாரியை பெறும் என இவ்வியலுள் எடுத்துக்காட்டப்பட்டன. அவ்வாறு கூறியவற்றைத் தவிர எஞ்சிய சொற்களும் உள்ளன. அவை உருபுகளோடு புணருகின்ற போது சாரியை பெற்றும் வரும்; பெறாமலும் வரும்.

புள்ளியீற்றுள் ண, ய, ர, ல, ள என்னும் ஐந்து ஈறுகளுக்கும் உயிரீற்றுள் இ என்னும் ஓர் ஈற்றுக்கும் இவ்வியலில் விதி கூறப்படவில்லை. அவ்வீறுகள் சாரியைகளைப் பெற்றும் வரும். பெறாமலும் வரும். **[எ-டு]**

மண்+ஐ → மண்+இன்+ஐ → மண்ணினை
கிளி+ஐ → கிளி+இன்+ஐ → கிளியினை
} சாரியை பெற்றன

மண்+ஐ → மண்ணை
கிளி+ஐ → கிளியை
} சாரியை பெறவில்லை

**(30)**